## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி – விடுதிகள் – 2012–2013–ஆம் ஆண்டு மனித வள மேம்பாட்டு குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரி விடுதியும், ஒரு பாலிடெக்னிக் விடுதியும் ஆக மொத்தம் 16 புதிய விடுதிகள் துவங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1)துறை</u>

**அரசாணை (நிலை) எண். 135** **நாள்: 28.11.2012.**

**திருவள்ளுவர் ஆண்டு 2043**
**நந்தன, கார்த்திகை 13**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண். சி2/1402/2012,
நாள். 14.5.2012 மற்றும் 10.7.2012.

- - - - -

<u>ஆணை:</u>

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் இஸ்லாமிய சிறுபான்மையின மாணவ/மாணவியரின் நலனுக்காக மொத்தம் 1266 விடுதிகள் இயங்கி வருகின்றன. 2012–13–ஆம் ஆண்டில் இத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பில் மனித வள மேம்பாட்டு குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரி விடுதியும், ஒரு பாலிடெக்னிக் விடுதியும் ஆக மொத்தம் 16 புதிய விடுதிகள் துவங்க அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. அதனடிப்படையில் மனித வள மேம்பாட்டு குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான பெரம்பலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சிவகங்கை, விழுப்புரம், திண்டுக்கல், கடலூர் ஆகிய 8 மாவட்டங்களில் தர்மபுரியை தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரி விடுதியும், ஒரு பாலிடெக்னிக் கல்லூரி விடுதியும், தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒரு கல்லூரி விடுதியும், ஒரு தொழிற்பயிற்சி விடுதியும் ஆக மொத்தம் 16 புதிய விடுதிகளை துவங்கக் கோரி மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளனர்.

3. மேற்கூறிய கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

I. 2012–2013–ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரி விடுதியும், ஒரு பாலிடெக்னிக் கல்லூரி விடுதியும் ஆக மொத்தம் 16 புதிய விடுதிகளை இணைப்பில் கண்டுள்ளவாறு துவங்கிட அரசு ஆணையிடுகிறது.

II. 2012–2013–ஆம் ஆண்டு துவங்கப்படும் 16 புதிய விடுதிகளில், 8 மிகப்பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி விடுதிகளாகவும், 8 மிகப்பிற்படுத்தப்பட்டோர் பாலிடெக்னிக் கல்லூரி விடுதிகளாகவும் இயங்கும். 8 கல்லூரி விடுதிகளும் மாணவியர் விடுதிகளாகவும், பாலிடெக்னிக் விடுதிகளைப் பொறுத்தவரை 5 மாணவர் விடுதிகளாகவும், 3 மாணவியர் விடுதிகளாகவும் இயங்கும்.

III. இந்த 16 புதிய விடுதிகளையும் நவம்பர் 2012 முதல் வாடகைக் கட்டடங்களில் துவங்கிடவும் இதன் மூலம் அனுமதி அளிக்கப்படுகின்றன.

IV. விடுதிகள் ஒவ்வொன்றிலும் 100 மாணவ/மாணவியர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

V. தருமபுரி மாவட்டத்தில் ஒரு கல்லூரி விடுதியும், ஒரு தொழிற்பயிற்சி விடுதியும் துவங்கப்படுதல் வேண்டும்.

3. புதிதாக துவங்கப்படும் 16 மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | பணியிடங்களின் விவரம் | ஊதிய விகிதம் | விடுதிகளுக்கான பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர்/ காப்பாளினி | ரூ.9300–34800+ 4400 (தர ஊதியம்) | 16 |
| 2. | சமையலர்/ உதவி சமையலர் | ரூ.4800–10,000+ 1300 (தர ஊதியம்) | (16X2) 32 |
| 3. | காவலர்/ஏவலர் | ரூ.4800–10,000+ 1300 (தர ஊதியம்) | 16 |
| 4. | துப்புரவு பணியாளர் | தொகுப்பூதியம் ரூ.2000/– | 16 |

ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர்/காப்பாளினி, ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவி சமையலர், ஒரு காவலர்/ஏவலர் மற்றும் தொகுப்பூதிய துப்புரவு பணியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்படுகின்றன.

4. மேலே பத்தி 2–ல் புதிதாக துவங்கிட அனுமதிக்கப்பட்டுள்ள 16 விடுதிகளுக்கு, ஆண்டொன்றிற்கு தொடர் செலவினம் ரூ.3,23,33,376–ம், தொடரா செலவினம் ரூ.33,73,600/–ஆக மொத்தம் ரூ.3,57,06,976/– ஆகும். நடப்பாண்டிற்கு 2012–13 ஆம் ஆண்டில் தொடர் செலவினமாக ரூ.1,31,20,992/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தொரு இலட்சத்து இருபதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று இரண்டு மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ. 33,73,600/– (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) ஆக மொத்தம் ரூ.1,64,94,592/–க்கு (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று இரண்டு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் (16 கல்லூரி விடுதிகள்)</u> :

“2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – KA – மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்”.

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(DPC 2225-03-277-KA-0105) | 58,99,392 | --- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-KA-0552) | --- | 4,80,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(DPC 2225-03-277-KA-0614) | 4,80,000 | --- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(DPC 2225-03-277-KA-2407) | --- | 22,53,600 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-KA-3424) | --- | 6,40,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-KA-6798) | 61,20,000 | --- |
| 99 பல்வகை<br>(DPC 2225-03-277-KA-9900) | 6,21,600 | --- |
| | 1,31,20,992 | 33,73,600 |
| மொத்தம் | ரூ. 1,64,94,592 | |

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை மேற்கொள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்க்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. தொடரா செலவினத்தில் ஒவ்வொரு கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி விடுதிக்கு கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான செலவினம் அனுமதிக்கப்படுகின்றது.

| வ. எண். | செலவினம் | அனுமதிக்கப்படும் தொகை ரூ. |
|---|---|---|
| (i) | எரிவாயு இணைப்பு | 30,000 |
| (ii) | நூலக வசதி | 30,000 |
| (iii) | பாத்திரங்கள் | 30,000 |
| (iv) | மரச்சாமான்கள் | 30,000 |
| (v) | அரவை இயந்திரம் | 8,000 |
| (vi) | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 |
| (vii) | விளையாட்டு கருவிகள் | 5,000 |
| (viii) | முதலுதவி பெட்டி | 650 |
| (ix) | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 4,000 |
| (x) | பூச்சி அழிப்பான் மின்கருவி | 5,100 |
| (xi) | பாய் (100 எண்ணிக்கை x ரூ.48) | 4,800 |
| (xii) | பெட்ஷீட் (100 எண்ணிக்கை x ரூ.100) | 10,000 |
| (xiii) | தட்டு மற்றும் டம்ளர் (100 எண்ணிக்கை x ரூ.75) | 7,500 |
| (xiv) | இன்வர்ட்டர் | 15,000 |
| (xv) | பாடக்குறிப்புப் புத்தகம் | 10,000 |
| (xvi) | புத்தக அலமாரி | 9,800 |
| மொத்தம் | | 2,10,850 |

8. இது ஒரு "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும். உரிய காலத்தில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு–I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் நிதி (வரவு–செலவு I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். 2012–13 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக் குறிப்பிணை நிதி (வரவு–செலவு–I) துறைக்கு அனுப்பி வைக்கும்படி மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இணைப்பில் கண்டுள்ள 16 புதிய விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ. சா. எண். 61614/CMPC/2012, நாள். 2.11.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1501 (ஆயிரத்து ஐநூற்று ஒன்று) பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை—5.
மாநில கணக்காயர், சென்னை—18 /(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை 1), சென்னை18/(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை—2), சென்னை  18/(பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை— 5, மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை— 9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை— 9.
நிதித் (பி.மிபி/வ.செ.பொ.I/வ.செ.பொ.II/CMPC) துறை, சென்னை— 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத் துறை செயலரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை— 9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
(பிந3 / சிந ஆபி) நலத்துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு/ உபரி நகல்கள்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

அரசாணை (நிலை) எண். 135, பி.மி.பி. (ம) சி.நலத் துறை, நாள். 28.11.2012—ன்படி
2012—2013—ஆம் ஆண்டில் புதிய விடுதிகள் துவங்கப்படும் இடங்கள்

### மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகள்

| வ.எண். | மாவட்ட பெயர் | புதிய மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகள் துவங்குவதற்கு பரிந்துரை செய்யப்படும் இடங்களின் விவரம் |
|---|---|---|
| 1. | பெரம்பலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, பெரம்பலூர். |
| 2. | திருவண்ணாமலை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, தென்னாங்கூர். |
| 3. | தருமபுரி | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, தருமபுரி. |
| 4. | கிருஷ்ணகிரி | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கிருஷ்ணகிரி. |
| 5. | விழுப்புரம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம். |
| 6. | திண்டுக்கல் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, திண்டுக்கல். |
| 7. | சிவகங்கை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சிவகங்கை. |
| 8. | கடலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, விருத்தாசலம். |

### மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி கல்லூரி விடுதிகள்

| வ.எண். | மாவட்ட பெயர் | புதிய மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி மாணவ / மாணவியர் விடுதிகள் துவங்குவதற்கு பரிந்துரை செய்யப்படும் இடங்களின் விவரம் |
|---|---|---|
| 1. | பெரம்பலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில் நுட்ப கல்லூரி மாணவியர் விடுதி, கீழ்கணவாய். |
| 2. | திருவண்ணாமலை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில் நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, காரப்பட்டு. |
| 3. | தருமபுரி | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ.) கல்லூரி மாணவர் விடுதி, கடகத்தூர். |
| 4. | கிருஷ்ணகிரி | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில் நுட்ப கல்லூரி மாணவியர் விடுதி, கிருஷ்ணகிரி. |
| 5. | விழுப்புரம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில் நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, அரகண்டநல்லூர். |
| 6. | திண்டுக்கல் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில் நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, பழனி. |
| 7. | சிவகங்கை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில் நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, காரைக்குடி. |
| 8. | கடலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில் நுட்ப கல்லூரி மாணவியர் விடுதி, சிதம்பரம். |

தங்க கலியபெருமாள்,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.